**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் .**

**OS. NO . 132/2015**

**2020ம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW3ன் வாக்குமூலம், ( 1969ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி ) திரு. எஸ். எழிலரசன், மொழி பெயர்ப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **DW3 பத்மநாபன்** | **வயது** | : |
| **த.பெ./க.பெ.** | : | **தொழில்** | : |
| **ஊர்** | : | **சமயம்** | : |
| **வட்டம்** | : | **ஜாதி** | : |
| **மாவட்டம்** | : | | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

விஸ்வநாதனை எனக்கு சுமார் 25, 30 வருடங்களாக தெரியும். இறந்துபோன ராதாகிருஷ்ணனை எனக்கு 25, 30 வருடங்களாக தெரியும். ராதாகிருஷ்ணனுக்கு அவர் வசித்த பகுதியில் அவர் வயதுள்ள நண்பர்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரிந்து இல்லை. ராதாகிருஷ்ணனுடைய செல் நம்பர் எனது போனில் அப்போது நான் சேமித்து வைத்திருக்கவில்லை. அதனால் அவருடைய எண் எனக்கு நினைவில்லை. விஸ்வநாதனும் நானும் ஒரே பள்ளியில் படிக்கவில்லை. நான் பிளேக் மேல்நிலை பள்ளியில் படித்தேன். விஸ்வநாதன் அந்த பள்ளியில் படித்தாரா என்றால் எனக்கு நினைவில்லை. எனக்கு விஸ்வநாதன் போனிலிருந்து போன் வரவில்லை. ராதாகிருஷ்ணன்தான் போன் செய்தார். பி.சா.2 பாலசந்தர் எனக்கு உறவினர் என்றால் சரியல்ல. எனது சாதிக்காரார். சுமார் இரண்டு மாதத்திற்கு முன்பு உயில் எழுத உள்ளது பற்றி ராதாகிருஷ்ணன் என்னிடம் சொன்னார். உயில் சொத்துக்களை எனக்கு தெரியும். ராதாகிருஷ்ணன் உயிருடன் இருந்த காலத்தில் நான் உயில் சொத்துகளுக்கு போய் உள்ளேன். வாதி ஜெயா உயில் சொத்துகளில் ராதாகிருஷ்ணனுடன் குடியிருந்ததை நான் பார்க்கவில்லை. அப்போது வேறு நபர்கள் வாடகைக்கு இருந்தார்கள். நான் உயிலில் கையெழுத்து போடும்போது மாலை 06.00 மணி இருக்கும். பாலசந்தர் எனக்கு முன்பாக கையெழுத்திட்டார். நான் கையெழுத்திட்ட பேனா எனக்கு வழக்கறிஞர் கொடுத்தார். எல்லோரும் ஒரே பேனாவில்தான் கையெழுத்திட்டோம். வழக்கறிஞர் மாநிறமாக சுமார் 05.00 அடிக்கு மேல் இருந்தார். அவர் குண்டாக இருக்கவில்லை சாதாரணமாக இருந்தார். வயது 40 முதல் 50க்குள் இருக்கும். நான் போகும்போது பாலசந்தர் அங்கு இருந்தார். விஸ்வநாதன் இருக்கவில்லை. ராதாகிருஷ்ணன் இறப்பதற்கு நான்கைந்து ஆண்டு முன்பிருந்து இறக்கும்வரை

நோய்வாய்பட்டு இருந்தார் என்றால் சரியல்ல. ராதாகிருஷ்ணன் தலையில் காயம்பட்டு மருத்துவ சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இறப்பதற்கு முன்பு சுமார் ஒரு ஆண்டு அளவில்தான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். உயில் எழுதியதாக சொல்லும் 2010 காலகட்டத்தில் நன்றாக இருந்தார். இறக்கும் தருவாயில் மெலிந்திருந்தார். உ யில் வரைவிற்கான விபரங்கள் யார் சொன்னது என்றால் தெரியாது. நான் போகும்போது உயில் எழுதி வைத்திருந்தார்கள். உயிலில் கையெழுத்து போட்ட பின் சுமார் 20 நிமிடத்தில் நான் எனது வீட்டிற்கு போனேன். பாலசந்தர் அங்கு இருந்தாரா என்றால் அவரும் கிளம்பிவிட்டார். எனக்கு அப்போது இருந்த போன் நம்பர் 9600527332 என்ற ஏர்டெல் நம்பராகும். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனக்கு ராதாகிருஷ்ணன் போன் செய்ததாகவும், வழக்கறிஞர் உயிலை படித்து காண்பித்ததாகவும், ராதாகிருஷ்ணன் அதில் கையெழுத்திட்டதாகவும், சொல்லியிருப்பவை பொய்யானவை என்றால் சரியல்ல. உயில் விஸ்வநாதன் எனது நண்பர் என்பதாலும், பாலசந்தர் எனது உறவினர் என்பதாலும், அவர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க பி.த.சா.ஆ.12 உயிலை மோசடியாக தயார் செய்து அதனை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் சரியல்ல. ராதாகிருஷ்ணன் அது சமயம் உயில் எழுதகூடிய அளவிற்கு நல்ல உடல்நிலை உடனும், நல்ல மனநிலையுடனும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு மேற்படி உயில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உயில் எத்தனை ரூபாய் முத்திரைதாளில் எழுதபட்டது என்பதை நான் பார்க்கவில்லை. உயிலில் உள்ள கையெழுத்துக்கள் ராதாகிருஷ்ணன் கையெழுத்துக்கள் அல்ல எனவும், 4,5 பிரதிவாதிகளுக்கு உதவ வேண்டும் என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- கு. கருணாநிதி )
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ),
தஞ்சாவூர்.